பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 28 ஸபர் 23 இதழ் 334

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-1-80

RECEIVED 1980-1-14 PERIODICALS DIVISION UNIVERSITY LIBRARY

பிளவ்ஸ் கிறீம்ஹவுஸ்
வழங்கும்
16 வயதினிலே
பொங்கலன்று
திறந்த வெளியரங்கில்
● ஈழத்து பாலசுப்பிரமணியம்
● சுஜதா அத்தநாயக்கா,
● சாந்தி கணபதிப்பிள்ளை
பிரவேசம்: 10/- 5/- 3/-
ரிக்கற்:- பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், நியூ பிளவ்ஸ்"லும் பெற்றுக் கொள்ளலாம். முந்துங்கள்!

உடன் பெற்றுக் கொள்ளலாம்
● மிகவும் சொகுசானது.
● அதிகம் கவர்ச்சியானது
● விரும்பிய கலர்களில் கிடைப்பது.
பல்க்கன்ஸ்கூட்டர்கள்
['FALCON SCOOTERS']
பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி
யாழ்ப்பாணம்.
போன்: 685.

# இந்திரா காங்கிரஸின் முதல் மாநில அரசு

# இன்று பதவியேற்கிறது

## அர்ஸ் - சரண் கூட்டு எதிரணி அமைக்க முயற்சி

(புதுடில்லி)

இந்திய லோகசபைத்தேர்தலில் திருமதி இந்திரா காந்தி அமோக வெற்றியீட்டியதை அடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் முதலாவது மாநில அரசு இன்று கர்நாடக மாநிலத்தில் பதவி ஏற்கிறது.

இதே சமயம் திருமதி இந்திரா காந்தி மத்திய அமைச்சரவையை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில் காங்கிரஸ் தலைவர் திரு. தேவ[illegible] மக்கள் கட்சித் (லோக்தள்) தலைவர் திரு. சரண்சி[illegible]த்து கூட்டு எதிர்க்கட்சி அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தினர்கள்.

தென் இந்திய மாநிலமான கர்நாடகத்தின் முதல் அமைச்சராக இருந்த திரு. தேவராஜ் அர்ஸ், லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததை அடுத்து தமது முதலமைச்சர் பதவியை ராஜினுமா செய்ததினுல் எழுந்துள்ள நிலை காரணமாக கர்நாடக கவர்னரின் அழைப்பின் பேரில் திரு. குண்டுராவின் தலைமையிலான அரசு இன்று பதவி ஏற்கிறது.

225 உறுப்பினர்களைக் கொண்ட கர்நாடக மாநில சட்டசபையில் தற்போது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு 128 உறுப்பினர்களின் ஆதரவு உண்டென்றும் தமது தலைமையில் புதிய அரசு இன்று பதவி ஏற்கும் என்றும் இந்திரா காங்கிரஸ் கர்நாடக மாநிலத் தலைவர் திரு. குண்டுராவ் தெரிவித்தார்.

சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் கட்சியில் 49 உறுப்பினர்கள் இருந்தனர். இப்போது அர்ஸ் காங்கிரஸிலிருந்து 69பேரும்எதிர்க்கட்சியிலிருந்து 10 பேரும் இந்திரா காங்கிரஸில் சேர்ந்து விட்டனர். இவர்களில்எட்டு அர்ஸ் அரசின் மந்திரிகளும் அடங்குவர் என்றும் அவர் கூறினுர்.

இது இவ்வாறிருக்க திருமதி காந்தி மத்திய அமைச்சரவை அமைப்பு குறித்து சிரேஷ்ட தலைவர்களுடன் இரகசிய ஆலோசனை நடத்திவருகின்றூர்.

### புதிய முகங்கள்

மத்திய அமைச்சரவையில் இம்முறை பல புதிய முகங்களுக்கு திருமதி காந்தி வாய்ப்பளிப்பார் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

(8ம் பக்கம் பார்க்க)

## நிஹாலின் குடியுரிமை ரத்து: பிரேரணை நிறைவேறியது

(கொழும்பு)

நீதி அமைச்சின் முன்னுள் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்ரமவுக்கு ஏழு ஆண்டு காலம் குடியியல் தகுதியீனத்தை விதிக்கும் பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் 119 வாக்குகளால் நிறைவேறியது.

இப்பிரேரணைக்கு 135 பேர் ஆதரவாகவும் 16 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

தமிழர் கூட்டணி உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். (இ)

### அரச ஊழியர் திடீர் இடமாற்றபிரச்னை

## இடமாற்றஉத்தரவை வாபஸ் பெற உயர்மாநாட்டில் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு இடமாற்றம் பெற்றுவந்து பின் ரத்து உத்தரவினுல் பாதிக்கப்பட்ட ஊழியர் பற்றி கொழும்பில் நடந்த உயர் அதிகாரிகள் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 9ந்திகதி பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு அலுவலகத்தில் மேலதிக செயலாளர் தலைமையில் நடந்த மாநாட்டில் இதுபற்றி முடிவு எடுக்கப்பட்டது.

இம்மாநாட்டில் மேலதிக செயலாளர், உள்நாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர், நிர்வாக உதவி செயலாளர், இணைப்புச் சேவை பதில் அதிகாரி, உதவி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இடமாற்ற ரத்துஉத்தரவை லமாற்றங்களுடன் வாபஸ் பெறுவதென்றும், இதனை பெப்ரவரி 15ம் தேதி அமுல் நடத்துவதென்றும், இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரத்துபின்போடுதல், புதிய இடமாற்றங்கள் ஆகியவை இதில் அடங்கிய லமாற்றங்களில் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட தகவலை, அரசாங்க எழுதுவினைஞர் சங்க செயலாளர் திரு. உருத்திரன் யாழ் கிளைக்கு அனுப்பியுள்ளதாக, யாழ் கிளை உப-தலைவர் திரு செ. மெற்ருஸ்மெயில் தெரிவித்தார்.

இடமாற்ற ரத்து உத்தரவு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அரசாங்க லிகிதர்சேவைசங்க யாழ். கிளை செயலாளர் திரு. கே.இ. கனகரத்தினமும் தெரிவித்தார். (க)

தூய வெண்மை தருவது
சஞ்ஜீவீ சோப் வகைகள்




உடலிலும் உரோமத்திலும் வியாதிகள்
ஏற்படாதிருக்க பெனின் மெடிகேடட்
சோப்பைப் பாவியுங்கள்.




தயாரிப்பாளர் :-
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9, கண்டி வீதி நாவற்குழி.

### பாடசாலைகளுக்கு நன்கொடை:

## லஞ்ச சட்டங்களுக்கு முரணனதா?

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்குப் பெற்ருேர் நன்கொடைகளை வழங்குவது லஞ்ச சட்டங்களுக்கு முரணனதா என்பதுபற்றி லஞ்ச ஆணையாளர் திணைக்களம் தற்பொழுது பரிசீலனை செய்துவருகின்றது.

இத்தகைய நடவடிக்கை பெற்ருேரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ளதாக லஞ்ச ஆணையாளர் திரு. நொயல் விஜயநாயக்கா தெரிவித்தார்.

[illegible] களை அனுமதிப்பதற்கு நன்கொடை வழங்கப்படவேண்டுமென்று பாடசாலை அதிகாரிகள் நிபந்தனை விதிப்பது லஞ்ச சட்டத்தின்கீழ் குற்றமாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

சில பாடசாலைகள் நன்கொடைபற்றி மாணவர்களை அனுமதிக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடும்படி கேட்கப்பட்டுள்ளதாக பெற்ருேர் புகார் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விண்ணப்பத்தில் அவர்கள் குறிப்பிட்ட நன்கொடை போதுமானதாக இல்லாவிட்டால் அவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை அதிகாரிகள் அனுமதி வழங்காது விடலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

விற்பனைக்கு

ஹொண்டா மோட்டார் சயிக்கிள் HONDA MOTOR CYCLE CD: 125-CD: 185 (புதியது) R. தொண்டமனுபன், 74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். போன்: 693.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

முகமாலைக்கும் பளைக்கும் இடையில் உள்ள தேனுவில் என்னும் 98 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: செல்வி M. P. இராசரத்தினம், 60, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 4624

சி. எல். 3514 இல. உடைய Nash Ambassdor (6 சிலிண்டர்) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 54, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 4621

## தேவை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளுக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புக் காணி நல்ல வீட்டுடன் அல்லது வீடு இல்லாமலும் தேவை. உடன் பணம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். இல. 2, மல்லிகா லேன், வெள்ளவத்தை, கொழும்பு-6 4607

## பயிற்சி

நாடக, அரங்கக் கல்லூரியால் நடிப்பு, நெறியாள்கை, பிரதியாக்கம், ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகிய அனைத்திலும் பயிற்சி அளிக்கப்படும். ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) பாட நெறிக்கேற்பவும் பயிற்சிகள் அளிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 15- 1- 80. செயலாளர், நாடக, அரங்கக் கல்லூரி, ''தாயகம்'' திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 4618

3 மாதங்கள் சனி ஞாயிறு மட்டும் நடைபெறும். மோட்டார் மெக்கானிக், மின்னியல் றேடியோ டெலிவிஷன் பயிற்சிகள் 18-01-80 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11 B மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 4619

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) Building Technology. PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

## வகுப்புகள்

LLB-First in Laws. சட்ட முதற் பரீட்சை 1980/81. கொழும்பு, யாழ். மன்னரி விரிவுரையாளர்களால் 5-1-80 தொடக்கம் நடாத்தப் படுகின்றது. அச்சடித்த குறிப்புகளுடன் முதல் மாத வகுப்புக்கு சகல மாணவர்களும் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். Cantabia Institute 166, Hospital Road, Jaffna. 4620

## கல்வி

குருநகர் சீநோர் இளைஞர்களுக்கும் வெளிநாடு செல்லும் இளைஞர்களுக்கும் விசேஷ ஆங்கில எக்ஸ்பிரஸ் வகுப்பு ஆரம்பம்: தை 21-ம் திகதி. பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் ஜி. சி. ஈ. உயர்தரம் வரை ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. ஆண் பெண்ணுக்குத் தனித்தனி வகுப்புகள். ரஞ்சித் டியூட்டரி, 195, அடப்பன் ஒழுங்கை (ரயில் பாதை) யாழ்ப்பாணம். 4627

---

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற மணியர் கந்தையா மயில்வாகனம், கோவளம், காரைநகர் என்பவரினது மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3490

எம். கே, மயில்வாகனம் கைம்பெண் கனகம்மா, கோவளம், காரைநகர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.

1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ந் நாள்.

4616

---

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற வோல்ரர் பேற்றம் முத்துநாயகம் அழகக்கோன் என்பவரது மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3495

வோல்ரர் பேற்றம் முத்துநாயகம் அழகக்கோன் கைம்பெண் பிரிம்றோஸ் நேசமலர், இல. 206, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மாசி மாதம் 1-ந் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.

4625

---

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.

### 1. சாக்கு கொள்வனவு (கேள்விப்பத்திரம்)

எமது சங்கம் நெற் கொள்வனவுக்காக வெற்றுச்சாக்குகள் கொள்வனவு செய்ய இருப்பதால், தங்கள் கூறு விலைகளைத் தரமும், விலையும்பிரித்து, கீழ்க் காணும் விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

### 2. நெல் தூக்குக்கூலி கேள்வி விண்ணப்பம்

எமது சங்கக் கிளைகளிலிருந்து 3புசல், 2 1/2 புசல் நெல் மூடைகளை வாகனங்களுக்கு ஏற்றுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காணும் விலாசத்துக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 20-1-1980.

### 3. நெற்கொள்வனவுக்கு வாகனங்களைப் பதிவு செய்தல்

எமது சங்கக் கிளைகளிலிருந்துநெற்களஞ்சியங்களுக்கு நெல் ஏற்றிச் செல்வதற்காக தங்கள் வாகன இலக்கங்களை 20-1-1980 க்குப் பிந்தாமல் காரியாலய வேலை நேரத்தில் சங்கத்தில் பதிவுசெய்துகொள்ளலாம். கூலி விபரங்களுக்கு நேரில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். பதிவு செய்த வாகனங்கள் மட்டுமே நெல் கொள்வனவுக்கு உபயோகப் படுத்தப்படும்.

தலைவர்,
கரைச்சி ... க்
... ம்,
... ரந்தன்.

4637

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கட்டாக்காலி நாய் பிடிப்பவர் பதவி

(தற்காலிகம்)

இம் மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப்பகுதியில் கட்டாக்காலி நாய் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விருப்பபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 40 வயதுக்கு உட்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கிய முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பிடிக்கும் ஒவ்வொரு நாயையும் கடல் நீரில் அமிழ்த்திக் கொல்லல்வேண்டும். இதற்குத் தாங்கள் கோரும் கட்டணத்தை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 24-01-80-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தமது விண்ணப்பத்தை பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
7-1-80. 4636

---

## ஊழியர் தேவை

அச்சுவேலி தொழிற் பேட்டையிலுள்ள இரசாயனத் தொழிற்சாலைக்கு

**J. S. C. தராதரமுள்ள ஊழியர்கள் தேவை.**

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாத்திரம்
21-1-80ற்கு முன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 4603,
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்,

4603

---

## புத்தம் புதிய கிடைத்தற்கரிய HONDA SUPER SPORTS C B 125 S

**மோட்டார் சைக்கிள்கள்**

உடனடியாக விற்பனைக்குள்ளன.
மிகக்குறைந்த எண்ணிக்கையே உண்டு.
முந்துங்கள்
**விலை 13400/-**

ஏனைய மொடல்களும் உண்டு: தொடர்பு கொள்ளுங்கள்
15, சென். பீற்றேஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4640) Tele: 7342

---

## பரணி ரூர்ஸ் அன்ட் ட்ரவல்ஸ்

பிரான்சுக்குப் பயணம் செல்ல விரும்பும் எவருக்கும்
உடனடியாக போய் திரும்ப
**U. T. A. டிக்கட்,**
ரூபா 13,440/- ட்ரவலர்ஸ் செக்
விஸா, மற்றும் சகல வசதிகளும்
ஒரு கிழமைக்குள் செய்து கொடுப்பதற்கு
தொடர்பு கொள்ளவும்:
**"போஸ்" BOSE**
221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

4638

---

## கேள்வி விண்ணப்பம்

நாவாந்துறை சந்தைக்கு அருகிலுள்ள
**தாழ்நில மீட்சி அபிவிருத்திச் சபை**
வேலைத்தலத்திற்கு
ஆனைக்கோட்டையில் இருந்து ஊரி மண்
ஏற்றிப் பறிப்பதற்கு
ட்ராக்டர் சொந்தக்காரர்களிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு கடித மூலம் தொடர்பு கொள்க.
பிரதேசப் பொறியியலாளர்,
தாழ் நில அபிவிருத்திச் சபை,
C/o உப தபால் நிலையம், நாவாந்துறை.

4635

---

## வலி தென் மேற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், சண்டிலிப்பாய்.

# வெற்றிடம்

### பொது முகாமையாளர் தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடம் இருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் அண்மையில் செற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 26-01-80க்கு முன்னர் ''தலைவர், வலி தென் மேற்கு தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், சண்டிலிப்பாய்'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### தகைமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. மூன்று வருட அனுபவத்துடன் கூட்டுறவு முகாமையாளர் தராதர (உயர்தர) பத்திரம் அல்லது
3. ஐந்து வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
4. 20,00,000 வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனம் ஒன்றில் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருட கால அனுபவம் உடைய ஒருவர்.

பிணை: காசுப்பிணை ரூபா 1700/-ம், காணிப் பிணை ரூபா 5000/-ம் கட்டப்பட வேண்டும்.

வயது: 23க்கும் 50க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்: 340 - 590
15×10, 20×5

(சகல படிகளும் வழங்கப்படும்)

சங்க எல்லைக்கு உட்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின், 12-5-72 திகதிய 5009/6/12 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

இப்படிக்கு
ஒப்பம்
மா. கந்தசாமி,
தலைவர்.

4652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

"உண்ண உணவின்றி வாடியவனும் நானே; தாகமுடன் தவித்தவனும் நானே; அவருடைய வார்த்தைகள் ஏமாற்றுச் சொற்கள் இல்லை; நிராதரவாக விடப்படும் கடைப்பட்டவர்களின் விழிகளில் தான் உண்மையான தெய்வ சக்தியைத் தரிசிக்க முடியும்.

...அன்னை திரேசா.

## மக்கள் கருத்து

### வீடியோ விவகாரம்

வீடியோ டெலிவிஷன்மூலம் படக்காட்சி நடாத்தியவர்களை பொலிசார் கைது செய்ததாக அண்மையில் ஒரு பத்திரிகையில் படித்தேன். உண்மையில் சனசமூக நிலையங்கள், பல பொதுப்பணி மன்றங்கள் தங்கள் பணிகளுக்கு நிதி சேகரிப்பதற்கு இந்த வீடியோ படக்காட்சிமூலம் நிதி திரட்டுவதை மிகவும் இலகுவான வழியாகக் கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல் இந்த வருடம் தமிழகத்தில் திரையிடப்படும் தமிழ் திரைப்படங்கள் ஏழு, எட்டு வருடங்களுக்குப் பிறகே நமது இலங்கையில் திரையிடப்படுகிறது. தமிழ்ப்பட ரசிகர்களின் ஆவலை ஏனோ தானோ என்ற முறையில், ஓரிரு படங்களைக் கைவசம் வைத்துக் கொண்டு சமாளிக்கும் நிலைமையில்தான் மந்தகதியில் அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் செயல்படுகிறது. வடக்கில் தமிழ்ப்பட ரசிகர்கள், புதிய தமிழ்ப்படங்களைப் பார்க்கின்ருர்கள் என்னும் அவசரத்தில் துடித்தெழும் திரைப்படக் கூட்டுத்தாபனம், தமிழ்ப்பட ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்துகொள்வதில்மட்டும் மந்தமாகச் செயல்படுவது எதற்காக?

இன்றையைப் பொறுத்தவரையில் படங்களின் உரிமைகளைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் கையேற்றதின் பின்பு பொதுப்பணி மன்றங்கள் நிதி உதவிக் காட்சிக்குத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தை அணுகினல், திரைப்படக் கூட்டுத்தாபனம், பழுதடைந்த பிரதிகளைக் கொண்ட ஒரு சில பழைய தமிழ்ப் படங்களையே தந்துதவும் தயாள மனப்பான்மையில் இருக்கின்றது. அத்தோடு படமாளிகைக்கு 700 ரூபா முதல் 900 ரூபாவரையில் ஒரு காட்சிக்கு மட்டும் செலுத்தவேண்டியுள்ளது. இப்படிப்பட்ட அவல நிலையில் நிதி உதவிக் காட்சிகளை நடாத்தி, பல பொதுநல ஸ்தாபனங்கள் தங்களிடம் இருந்த அற்ப சொற்ப நிதிகளையும் இழந்துள்ளன. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் நிதி உதவிக் காட்சிக்கு, பல புதிய தரமான சிங்களப் படங்களைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் கொடுத்து உதவுவதோடு படமாளிகைக் கட்டணமும் மிகவும் குறைந்த தொகையையே அறவிடுகிறது. இந்நிலையில் 18 இஞ்சி அளவுள்ள டெலிவிஷனில் ஆகக்கூடியது ஒரே தடவையில் 200 பேரளவில் பார்க்கக்கூடிய டெலிவிஷன் படக்காட்சியைத் தடை செய்வதும், யாழ். பொலிஸ் அதிபர் இக்காட்சியைத் தடை செய்யக் கோருவதும், யாழ். திரையரங்கு உரிமையாளர்கள் பலர் இக்காட்சிபற்றி அதிஉத்தம ஜனதிபதி அவர்கட்கு தெரியப்படுத்தியுள்ளதும், பல தமிழ்ப்பட இரசிகர்களுக்கும், இக்காட்சிமூலம் சிறிதான நிதிகளைச் சேகரித்துவந்த பல பொதுநல ஸ்தாபனங்களுக்கும் மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே தனியான நபர்களைத் தவிர்த்து, நம்பிக்கை வாய்ந்த பொது பொதுநல ஸ்தாபனங்களுக்கு இக்காட்சியை நடாத்துவதற்குரிய அனுமதியினை திரைப்படக் கூட்டுத்தாபனமும், யாழ். பொலிஸ் அதிபரும் வழங்குவார்களா?

**வி. எம். ஜே. பீற்றர்சன்**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# பாடசாலை நூலகங்களை

## விருத்தி செய்வது தேசியப் பொறுப்பு

எதிர்வரும் 19-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கும் நூலகவியற் கருத்தரங்கையொட்டி இக் கட்டுரை இங்குவெளி வருகிறது

**ரஞ்சிதமலர் நவரத்தினம் பி. ஏ. (ஆனர்ஸ்)**
(நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

எந்த ஒரு நாட்டிலும் பொறுப்புள்ள பிரஜைகளை உருவாக்குவதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வெறும் ஏட்டுக்கல்வியாலன்றிச் சுயகல்வியால்தான் இப்பணி முழுமைபெற முடியும் என்பது இன்று உணரப்பட்டுள்ளது. கல்வி கற்பது மனிதனின் ஜனநாயக உரிமை என்ற கருத்து வலுப்பெற்ற போது 1945-ம் ஆண்டு எமது நாட்டில் இலவசக் கல்வியும், தாய்மொழி மூலம் கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டன. காலப்போக்கில்ஆங்கிலமொழி மூலம் கல்வியென்பது படிப்படியாக முக்கியத்துவமிழக்க தாய்மொழிமூலம் கல்வி தேசிய ரீதியில் நடைமுறைக்கு வந்தது. பாடசாலைகள் கனிஷ்ட, மகாவித்தியாலய, மத்தியமகா வித்தியாலயங்கள் எனத் தரப்படுத்தப்பட்டன. இவற்றிற்கேற்றவகையில் நவீனகல்வித் திட்டமொன்றும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நவீன கல்வித் திட்டம் சில குறிப்பிடத்தக்க அம்சங்களை அடக்கியுள்ளது. தொழிற் பயிற்சியும், தேசிய பாரம்பரிய உணர்வும், பிறநாட்டுக் கலாசாரங்கள் பற்றிய அறிவும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கம். தனிமாணவனின் ஆளுமையையும், இயல்பூக்கங்களையும் மனதில்கொண்டு விரிவான முறையில் இப்பாடத்திட்டம் வரையப்பட்டுள்ளது. குறிப்பாக ஒரு பாட நூலிலோ, அல்லது ஆசிரியரின் வாய்மொழிப் போதனையிலோ மாத்திரம் பெறப்படும் கல்வியை இது புறக்கணிக்கின்றது. 'கற்பதற்குக் கற்றல்' [Learn to Learn] என்ற கருத்தில் மாணவன் ஒருவன் தனதுவாழ்க்கை முழுவதற்கும் தேவையானகல்வியைப்பெறும் வழியைப் பாடசாலை மட்டத்திலேயே அறிந்து கொள்வதற்கு இக் கல்வித்திட்டம் வழிவகுத்துக் கொடுக்கின்றது. சுருங்கக்கூறின் பாடசாலை நூலகங்களின் அவசியத்தை வேண்டி நிற்கும் ஒரு நவீன கல்வித்திட்டம்இது எனலாம்.

இத்தகைய ஒரு கல்வித்திட்டத்தையும், மாணவனையும் நெருக்கமாகப் பிணைப்பதற்கு பாடநூல்களையும், ஆசிரியரையும்விடப் பாட சாலை நூலகமே அதிகபொருத்தமானது என்ற உண்மையை அரசாங்கம் உணராது விடவில்லை. அவ்வப்போது பாடசாலைகளில் நூலகங்களின் அவசியத்தை எடுத்துக்கூறியும், ஆவன செய்தும் வந்துள்ளது. இருந்தபோதிலும் இன்றைய நிலையை நோக்கும்போது, பெரும்பாலான பாடசாலைகளில் நூலகம் என்றஒரு அமைப்பு இருப்பதாகவே தெரியவில்லை. 1979-ம் ஆண்டின் மதிப்பீடொன்றின்படி இலங்கையில் 9052 அரசாங்க பாடசாலைகளும், 37 தனியார் பாடசாலைகளும் 366 தோட்டப்பாடசாலைகளும் 285 பிரிவேனைப்பாடசாலைகளும் இருப்பதாககணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 3 லட்சத்திற்குமதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். கனிஷ்ட பாடசாலைகள் 63 வீதமாகவும் மகாவித்தியாலயங்கள் 30.7 வீதமாகவும் மத்திய மகாவித்தியாலயங்கள் 5.3வீதமாகவும் விளங்குகின்றன. இவற்றுள் நூற்றுக்குப் பத்துப் பாடசாலைகளிலாவது ஒரு நூலகம் இயங்குகின்றது எனக்கூற முடியாது.

1969-ம் ஆண்டில் கல்விநூற்ருண்டைக் குறிக்குமுகமாக சியவச நூலகங்கள் மத்திய மகா வித்தியாலயங்கள் சிலவற்றில் நிறுவப்பட்டன. எனினும் பாடசாலைகளில் மிதமிஞ்சிய மாணவ தொகை காணப்படுவதாகவும் வகுப்பறைகளே பற்ருக் குறையாக இருப்பதாலும் நூலகங்கள் இல்லாமலே பெரும்பாலான பாடசாலைகள் இயங்கிவருகின்றன. கனிஷ்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பாடசாலை நூலகம் என்ற ஒன்றினைப் பற்றி அறியாதவர்களாகவே இருக்கின்றனர் எனலாம். மகாவித்தியாலயங்கள், மத்திய மகாவித்தியாலயங்கள் சிலவற்றில் பெற்ருேரின் பண உதவியைப் பெற்றும் அரசாங்கத்தின் சிறு உதவித்தொகை பெற்றும் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கூறும் பொழுது தனிப்பட்ட நூலகக் கட்டடங்களைவிட, வகுப்பறை ஒன்றிலோ அல்லது அலுமாரி ஒன்றிலோ பூட்டப்பட்டிருக்கும் நூல்களையே இது பெரும்பாலும் குறிக்கின்றது.

இத்தகைய நூலகங்கள் அளிக்கும் சேவைபற்றி ஆராயும் போது அவை எந்த அளவிற்குப் பாடசாலையின் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்றன என்ற விடயம் முக்கியம் பெறுகின்றது. இந்த நூலகங்கள் மாணவர்கள் எந்நேரமும் பயன்பெறத்தக்க விதத்தில் இயங்குவதில்லை. தலைமை ஆசிரியரின், அல்லது தளபாட அறையிலிருக்கும் ஒரு அலுமாரியே நூலகமாக விளங்குமிடத்து, தலைமை ஆசிரியர் அல்லது வகுப்பாசிரியர் அனுமதியுடன் அவர்களின் தேவை கருதியே அவ்வப்போது திறக்கப்படுகின்றன. அவ்வாறன்றித் தனியறை ஒன்றில் பத்திரிகைகள், ஒரு சில நூல்கள், தளபாடங்களுடன் கூடிய பாடசாலை நூலகம் அமைந்திருக்கின்றதெனக் கொள்வோம். அது பாணவர் தம்மைத்தானே கற்பித்துக் கொள்ளும் இடமாக அமைவது அரிது. வகுப்பாசிரியர் வராத சமயங்களில் மாணவர்கள் பொழுதினைப் போக்கும் இடமாகவோ அல்லது ஆசிரியர்கள் பத்திரிகை படித்தும் ஓய்வெடுத்தும் பொழுதினைப் போக்கும் இடமாகவோ பயன்படுகின்றது. அவசியம் நேரும்போது அதுவே பரீட்சை நடைபெறுமிடமாகவும் ஆசிரியர் கூட்டம் நடைபெறுமிடமாகவும் மாறுகின்றது. இந்த நூலகங்களில் சேவை நேரம் பாடசாலை இயங்கும் நேரத்துடன் ஒத்திருப்பதால் பாடசாலை முடிந்தபின் மாணவன் இதனைப் பயன்படுத்த வசதியில்லை.

இந் நூலகங்களின் நூற்சேர்க்கையானது பாடத்திட்டத்திற்கு ஏற்ற முறையில் அமையாமை முக்கியமான குறைபாடாகும். 1967-ம் ஆண்டு இலங்கையின் பாடசாலை நூலகங்களை ஆராய்ந்து அறிக்கை வெளியிட்ட யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் நூலக நிபுணர் செல்வி இ. இவான்ஸ் அவர்கள் இக் குறைபாட்டை முக்கியமானதாகச் சுட்டிக் காட்டினுர். 95% சுயமொழியில் அமைந்த கல்வித்திட்டம் தமிழ், சிங்களப் பாடநூல்கள் இன்றியே நடைமுறைப் படுத்த படுவதையிட்டு அவர் வியப்படைந்ததில் தவறில்லை. காலம் காலமாகப் பாடசாலையில் சேகரிக்கப்பட்டு வந்த பழைய ஆங்கில நூல்களே இந்த நூலகங்களின் நூற்சேர்க்கையில் பெரும் பங்கினை உள்ளடக்குகின்றன. இவை ஆசிரியருக்குக்கூட பாடத்தைத் தயாரிப்பதற்கு உதவாத பழைய கல்விமுறைக்குரியனவாகும். கல்வியமைச்சு வெளியிடும் ஆசிரியர் வழிகாட்டி நூல்கள், தலைமையாசிரியரின் அலுவலகத்திலும், தனிப்பட்ட ஆயிரியர்கள் வசமும் காணப்படுகின்றன. தரமான தேசப்படத் தொகுதிகள். வாய்ப்பாடுகள், அட்டவணைகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், விஞ்ஞான, பொருளியல், வர்த்தக நுண்கலை சம்பந்தமான நூல்கள் அரிதாகவே இடம்பெற்றிருப்பதுடன் இருப்பனவும் பழைய பதிப்புக்களாகும். பயனுள்ள பொழுது போக்கினைத் தூண்டுவன, சிந்தனையைத் தூண்டுவன, வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டுவன என்ற வகையில் நூல்களை இனம்காண முடியாதுளது.

இப்பாடசாலை நூலகங்களில் பெரும்பாலானவை ஒரு நூலகரைக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறு ஒருவர் இருக்கின்ருர் என்ருல், அவர் அனேகமாக பகுதிநேர நூலகக் கண்காணிப்பாளராகிய ஒரு ஆசிரியராகவோ அல்லது பழைய மாணவராகவோதான் விளங்குகின்ருர். ஓரளவு பயிற்சி பெற்ற நூலகரும் அரசாங்க நியமனம்பெருது உதவிச்சம்பளப்பணத்தில் நியமனம் பெற்றவர்களாக உள்ளனர். அவ்வாறன்றி. அரச நியமனம் பெற்ற பயிற்சி பெற்றவராக இருப்பினும், அவர் தலைமையாசிரியரின் அதிகாரத்துக்குட்பட்டே இயங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது,

## பாடசாலை நூலகர்களுக்கு ஆசிரியர்களுக்குச்சமமான முக்கியத்துவமும் கௌரவமும் வேண்டும்!

இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து, பாடசாலை நூலகங்களின் சேவையைத் திருப்திகரமாக்குவது இன்றைய நிலையில் இன்றியமையாதது ஒன்ருகும். கல்வியமைச்சு. தேசிய நூலகசேவைகள் சபை, யுனெஸ்கோ, ஆசிரியர்கள், பெற்ருேர்கள் எனப் பலரும் ஒருங்கிணைந்து இம் முயற்சியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். தேசிய ரீதியில் அமைந்த பாடசாலை நூலகச் சட்டம் ஒன்றின் மூலம் எல்லா நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்த முறையில் செயலாக்க முடியும்.

முதலாவதாக பாடசாலைகள் தோறும், அவற்றின் தரத்திற்கு ஏற்ற வகையில் நூலகம் என்ற தனியமைப்பு இடம் பெற வேண்டும். போதிய நிதிவசதிரம்,ஆர்வமும் இருந்தாலன்றி இது கடினமான பணியே. அரசாங்கம் அண்மையில் அறிமுகப் படுத்தியுள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இப்பணியை ஏற்று நடைமுறைப் படுத்தினுல் பாடசாலை நூலகம் என்ற கருதுகோளை உண்மையாக்க முடியும். நூலகம் தனிப்பட்ட ஓர் கட்டடமாக அல்லது பாடசாலைக்கட்டடத்துஇ அமைந்த விசாலமான அறையாக அமையலாம். போதியளவு காற்றும் வெளிச்சமும் சிருர்கள் அமர்ந்து படிப்பதற்கேற்ற தளபாட வசதிகளையும் கொண்டு விளங்கவேண்டும். ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒரு நூலகம் என்பது சாத்தியமில்லாவிடில் கல்வி வட்டார ரீதியாக ஒரு மத்திய பாடசாலை நூலகத்தைச் சகல வசதிகளுடனும் நிறுவி ஏனைய பாடசாலைகள் அதில் பயன் பெறும்படி செய்யலாம். நவீன கல்வித்திட்டமானது, மாணவன் ஒருவன் பாடசாலை நூலகம் என்பதொன்றினை அறியாதவனுகவே பாடசாலைக் கல்வியை முடித்துக்கொள்ளும் நிலையை மாற்றியுள்ளது என்பது உண்மையாருல், நூலக வசதியைப் பெறமுடியாத பாணவனுக்கு கல்வியுரிமை மறுக்கப்பட்ட ஒன்ருகவே கொள்ளப்படவேண்டும்.

பாடசாலை நூலகத்தில் தகுதியும், பயிற்சியும் திறமையும் சுதந்திரமும் உள்ள முழுநேர நூலகர் இல்லாவிடில், அந்த நூலகம் இருப்பதால் பயனில்லை. பாடசாலையின் கல்வித்திட்டம் பற்றிய அறிவும், தானும் அதில் பங்கெடுக்க வேண்டும் என்ற ஆர்வமும் நூலகருக்கு இருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட நிதியைக் கொண்டு அவசியமான, பொருத்தமான நூல்களை வாங்குவதில் மட்டுமன்றி அவற்றை உகந்த முறையில் ஒழுங்குபடுத்தி, மாணவர்களுக்கு நூலகப்பாவனையை சுலபமாக்குவதிலும் அவர் திறமையுடையவராக விளங்கவேண்டும். மாணவரின் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதிலும், பொருத்தமான நூலைத் தெரிவதிலும் அவர் ஓர் ஆசிரியரைப்போல வழிகாட்ட வேண்டும். ஆசிரியர்களுக்குச் சமமான கௌரவமும், முக்கியத்துவமும், ஊதியமும் இவருக்கு வழங்கப்படவேண்டியது அவசியம்.

நூலகத்தின் நூற் சேர்க்கை பாடசாலையின் தரம் மொழி என்பனவிற்கேற்றபடி அமையலாம். பல்வேறு வகுப்பினருக்கும் உதவும் உசாத்துணை நூல்கள் சுயமொழியிலான பாடநூல்கள் சுயசிந்தனை பொழுது போக்குகளை வளர்க்கக் கூடிய நூல்கள் அதிக அளவில் இடம் பெறவேண்டும். வர்ணனை உள்ளனவும் தகவல்களை தருவனவும் சித்திர விளக்கம் கொண்டனவுமாக இருக்கும் நூல்களை கவனமாகத் தெரிந்து வாங்க வேண்டும். தெளிவான அச்சு கடினமான கட்டு தரமான மொழிநடை நீடித்த பாவனை கொண்ட நூல்கள் உகந்தவை. கட்புல செவிப்புல சாதனங்களும் ஓரளவில் இடம் பெறலாம், பாடசாலையின் கல்வி கலாச்சார பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளின் மையமான நூலகம் உயிர்த்துடிப்புள்ள நிறுவனமாக இருந்தாலன்றி அது மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவரமுடியாது,

பாடசாலை நூலகத்தின் வேலைநேரம் பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஆகக்குறைந்தது ஒருமணிநேரத்தின் முன் தொடங்கி பாடசாலை நேரம் முடிவடைந்தபின் சில மணி நேரங்களின் பின்னரே முடிவடைய வேண்டும் கிழமை விடுமுறை நாட்களிலும் தவணை விடுமுறைநாட்களிலும் குறித்த நேரம் அவை சேவையிலீடுபட்டிருக்க வேண்டும். மாணவர் நூலகத்தில் தினந்தோறும் ஓரளவு நேரத்தைக் கழிக்கவகை செய்யும் விதத்தில் போதனை முறையை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கித்திருட்டுவழக்கு:

# 19 பேரும் மீண்டும் பிணையில் அனுமதி

(மட்டுவில)

சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றக் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கித் திருட்டுவழக்கில் சந்தேக நபர்களை பிணையில்செல்ல சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் அனுமதியளித்தார்.

1979-ம் ஆண்டு 17ந் திகதி ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற இத்துப்பாக்கித் திருட்டில், பொலிசார் 41 சந்தேக நபர்களை தேடிவந்தனர். இதில் 19 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 19 பேரும் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டினர் முன்னிலையில் வாக்குமூலம்அளித்திருந்தனர். இவர்களை நீதிபதி பாலகிட்டினர் பிணையில்செல்ல ஏற்கனவே அனுமதியளித்தார். பின்னர் மீண்டும் அவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த 19 சந்தேகநபர்களும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள்சார்பில் சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரம், சட்டத்தரணிகள் திரு. வி. செல்லத்தம்பி, திரு. சி. சுரேந்திரன், திரு. வி. பி. கார்த்திகேசு ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிகோரி விண்ணப்பித்தனர்.

சட்டத்தரணிகளின்மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி திரு. விக்னேஸ்வரன், சந்தேகநபர்களை பழையபிணையில்செல்ல அனுமதித்து தேவைப்படும் நேரம் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று உத்தரவிட்டார்,

# இன்று நடைபெறும் பாலமுரளியின் கச்சேரி

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் கட்டிட நிதிக்காக இந்தியாவின் மிகப் பிரபல்யம் வாய்ந்த இசை வித்தன்னர்களுள் ஒருவராகத் திகழும் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் இசைக்கச்சேரி இன்று மாலை யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறுகிறது. கடந்த புதன் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

பாலமுரளி கிருஷ்ணாவின் மேல் விலாசங்களைப் பற்றிக் கூறவேண்டிய தேவை இருக்காது. அவரை எல்லோருமே அறிந்திருக்கிறார்கள்.

இலங்கையிலும் சிலர் பின்பற்றும் விதத்தில் தனித்துவமான பாணியொன்றை உருவாக்கியிருப்பவர்.

அவர்; சில வேளைகளில் சர்ச்சைக்குரியவராகவும் திகழ்பவர்!

கடந்த ஆண்டின் இந்நாட்களில் கூட, அவர் கண்டுபிடித்த புதிய ராகங்கள் தொடர்பாக மிகநீண்ட சர்ச்சை தொடராக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஒவ்வோர் இசைவிழாவிலும் ஒவ்வொரு புதுமையான பல்லவியை அமைத்துப் பாடுபவர் பாலமுரளி.

இம்முறை தமிழிசைச் சங்கத்தில் 'நவமுகி' என்ற புதிய தாளத்தில் பல்லவி ஒன்றை அமைத்துப் பாடியிருந்தார்.

கதிரேசன் மண்டபத்தில் அவருடைய இசையின் அனுபவம்... அதைப்பற்றி இங்கு விமர்சனம் செய்யவில்லை, அது, அவர்ஓர் ஆராய்ச்சிக்கூடம் என்ற அனுபவ உணர்வையே எனக்கு அளித்துக் கொண்டிருந்தது.

கடைசியாக கான குதூகலத்தில் ஒரு தில்லானு; அது அவரே அமைத்ததுதான். என்ன 'விவகாரங்கள்' அவை!

"ஒரு நாள் போதுமா..." என்ற பாடல் அவர் 'திருவிளையாடல்' திரைப்படத்துக்காகப் பாடியதுதான்.

ஆனல் அதை அவர் பாடுகின்றபோது 'திரைப்படத்துக்காக பாடியதுபோல் தெரியவில்லை'!

-'மாலி'

## சிவநெறிக் கழகம் நடத்தும் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்தும் பொங்கல் விழா இம்மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறும்.

சிவநெறிக் கழகப் பிரதித் தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் விழா நடைபெறும்.

......

## கீரிமலை சிவநெறிக் கழகத்தின் பணித்தொடர்

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோவிலில் சிவநெறிக்கழகம் நிகழ்த்தும் வளர்ச்சிப் பணிகள் பலவாகும்.

02-10-1976 -ம் திகதி ஆரம்பிக்கப் பெற்ற சிவநெறிக் கழகம் ஆங்கில மாதந்தோறும் விரிவுரைகளையும், ஆய்வரங்குகளையும் சித்தாந்த வகுப்புக்களையும் நடத்தியும் பண்ணிசை, சமய அறிவு, நீதிச் செய்யுள் மனனம் ஆகிய போட்டிகளை நிகழ்த்திப் பரிசில்கள் வழங்கியும், புத்தாண்டு, தைப்பொங்கல் ஆடி அமாவாசை, மகாசிவராத்திரி விழாக்களைக் கொண்டாடியும், தகுதிகண்டு சைவ நூல்களை அறிமுகஞ் செய்தும் சிவப் பணி புரிந்து வருகின்றது.

1980 ஆம் ஆண்டுக்கான செயற் திட்டத்தில் பொது நிகழ்ச்சிகளாக ஆங்கில மாதந்தோறும் 1-ஆம், 3-ம் ஞாயிற்றுக்கிழமைகளில் பண்ணிசை வகுப்பு, தத்துவ விரிவுரை, ஆய்வரங்கு சித்தாந்தக் கருத்தரங்கு என்பன நடாத்தப்படும்.

சிவநெறிக்கழகப் போட்டிகளாக அடுத்த மாதம் 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பண்ணைசப் போட்டியும், நாவன்மைப் போட்டியும் நடைபெறவுள்ளன. தொடர்ந்து வைகாசி ஆடி மாதங்களில் முறையே நீதிச்செய்யுள் மனன எழுத்துப் போட்டி என்பன நடாத்தப்படும்.

பொங்கல்விழா சிவராத்திரி விழாவும்பரிசளிப்பும், நூல்கள் அறிமுகம், புத்தாண்டு விழா, சைவமலர்ச்சி விழாவும் பரிசளிப்புமென்ற சிறப்பு நிகழ்ச்சிகள் அவ்வவற்றிற்கு உரிய தினங்களில் நடைபெறும். (நா)

......

## இடமாற்றச்சபை 14-ம் திகதிகூடும்

(பண்டத்தரிப்பு)

மாவட்டத்திற்குள் சுகாதார சேவைத்திணைக்கள ஊழியர்களை இடமாற்றம் செய்யும் சுகாதாரத் திணைக்களத்தின் புதிய திட்டப்பிரகாரம் யாழ் மாவட்டத்திலுள்ள மருந்துக் கலவையாளர்களை இடமாற்றம் செய்யுமுகமாக இடமாற்றச்சபை யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் தலைமையில் எதிர்வரும் 14-ம் திகதி திங்கட்கிழமையன்று கூடவுள்ளது.

அரசாங்க மருந்து கலவையாளர் சங்க யாழ். மாவட்டக்கிளையின் செயலாளர் மருந்துக்கலவையாளர்களின் சார்பில் இந்த இடமாற்றச் சபையில் கலந்து கொள்வார். (அ)

......

## கட்சிப்பிரசாரத்திற்கு ஆனைமடுவ எம்: பி. யாழ். வருகிறார்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகளின் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு கட்சியின் கொள்கை விளக்கம்பற்றி எடுத்துரைப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப்பிரமுகரும், ஆனைமடுவ தொகுதி எம். பி. யுமான திரு. சததிஸ்ஸ வடிவமங்காவ அடுத்த மாதத்தில் யாழ். மாவட்டத்திற்கு வரவுள்ளார். இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி கு. விநோதன் மேற்கொண்டுள்ளார். (அ)

......

## கசிப்பு காய்ச்சுகையில் கைது

(பண்டத்தரிப்பு)

வடிசாராயம் காய்ச்சும்போது கையும்மெய்யுமாக சங்கானைப் பொலிசாரினுல் பிடிக்கப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டநபர்ஒருவருக்கு 300ரூபா அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினுர்.

சங்கானைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. ஏ. ஆரியபாலா தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி பண்டத்தரிப்பிலுள்ள வீடொன்றை முற்றுகையிட்டபோது அங்கு வடிசாராயம்காய்ச்சிக்கொண்டிருந்த மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். வடிசாராயம் காய்ச்சுவதற்கு உபயோகிக்கப்பட்ட [illegible] பறிமுதல் செய்யப்பட்டன. (அ)

## சிங்கப்பூரில் சமயச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் காத்தோங் ஸ்ரீ செண்பகவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் சர்வபோத கலாச்சாரியராகக் கலந்துகொண்டுள்ள சுன்னுகம் நல்லை ஆதீன ஈசான சிவாச்சார்ய கலாநிதி நா. சோமாஸ்கந்தக்குருக்கள் அங்கு விழாக்காலத்தில் தொடர்ந்து 15 தினங்கள் விசேஷ சமயச் சொற்பொழிவை மேற்கொண்டுள்ளனர். இம் மகோற்சவம் கடந்த 8-ந் திகதி செவ்வாய் முதல் ஆரம்பமாகி 22-ந்திகதி செவ்வாய் வரை நடைபெறும்.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு ஆலய நிர்வாகத்தாரின் அழைப்பை ஏற்று சிங்கப்பூர் பயணத்தை மேற்கொண்டுள்ள நா. சோமாஸ்கந்தக்குருக்கள் சிங்கப்பூர் நகரில் பல்வேறு சமய நிகழ்ச்சிகளிலும் சமயச் சொற்பொழிவுகளிலும் கலந்துகொள்வார். (அ)

......

## கடற் தொழிலாளர் கருத்தரங்கு

(நாத்தாண்டியா)

தொடுவாவ கடற்தொழிலாளர் கூட்டுறச் சங்கமும், தேசிய இளைஞர்சேவை மன்றமும் இணைந்து இளம்கடற் தொழிலாளர்களுக்கான கருத்தரங்கொன்றினை இன்று நாத்தாண்டியா தேர்தல் தொகுதியில் நடத்தவுள்ளன.

இக்கருத்தரங்கில் கடற் தொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, தெங்கு உற்பத்தி அபிவிருத்தி அமைச்சர் திரு. ஹரோல்ட் ஹேரத்தும் கலந்துகொள்ளவுள்ளனர்.

......

## வெள்ளிதோறும் பஜனை

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு ஸ்ரீமகாகாளி அம்மன் பஜனைச் சபையினர் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஸ்ரீமகாகாளியம்மன் ஆலயத்தில் பஜனை செய்து வருகின்றனர். அண்மையில் இச்சபையினர் திருவெம்பாவை பூசையையும் சிறப்பாகச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

......

## இடமாற்றம்

(நயினுதீவு)

கிளிநொச்சிக்காணி அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்களப் போதனுசிரியர் திரு. க. ப. சு. பரராசசேகரம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (நா)

## நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி அங்குரார்ப்பணம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை விசேஷ ஆணையாளர் இம்மாதம் முதல் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதியை ஆரம்பித்துள்ளார். இதுவரை வாசிகசாலையை மட்டும் நடாத்தி வந்த கிராம சபையினர் நூல் நிலையத்தையும் சேர்த்து நடாத்த முன்வந்துள்ளதுடன் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான புதிய நூல்களையும் இரவல் கொடுக்கும் பகுதிக்கு வாங்கியுள்ளனர்.

கந்தோர் வேலை நாட்களில் மட்டும் இரவலாக நூல்களைப் பெற்றுக்கொள்ளும் ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளது. புதிய நூல்நிலையக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு நான்கு சுவர்கள் மட்டும் கட்டப்பட்டு முற்றுப்பெருமல் இருக்கும் கட்டிடம் வுரைவாகக் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கம்பட்டுள்ளன. (அ)

......

## வடபகுதி சுதந்திரக்கட்சி புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரசட்சிக்கிளைகளை புனரமைப்புச் செய்து புதிய உறுப்பினர்களை அங்கத்தவர்களாகச் சேர்க்கும் வேலைகள் இம்மாதம் முடிவுவரை நீடிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி கு. விநோதன் தெரிவித்தார்.

கட்சியின் வருடாந்த மகாநாடு எதிர்வரும் பங்குனி மாதத்தில் நடைபெறும் என்றும் அதற்கிடையில் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் மாவட்டக்கிளை உத்தியோகத்தர் தெரிவுகள் நடாத்தப்பட்டவேண்டும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் நாட்டிலுள்ள கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் அண்மையில் அனுப்பிவைத்துள்ள அவசர சுற்று நிருபத்தில் கேட்டுள்ளது.

## அமைச்சர் முகமத் மலேசியா பயணம்

(கொழும்பு)

கோலாலம்பூரில் நடைபெறும் ஹிஜ்ரி நூற்ருண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமத் மலேசியா பயணமானுர்.

......

## இடமாற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல்இம்மாதம்தொடக்கப்சங்கானை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். நெடுந்தீவுக்கு புதிய உதவி அரசாங்க அதிபர் நியமிக்கப்படும்வரை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ். தம்பிமுத்து பதில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவார் என அறியப்படுகின்றது.

......

## பாடப்புத்தகம் எடுத்துச் செல்ல சங்கப் படகு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கென அரசு வழங்கும் இலவச பாடப் புத்தகங்களை குறிகாட்டுவானில் இருந்து இலவசமாக நெடுந்தீவுக்குக் கொண்டு செல்வதற்கு நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கப்படகை இலவசமாகப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்குரிய பாடப் புத்தகங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் விநியோகிப்பதற்கானநடவடிக்கைகளைப் புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. குகதாசன் மேற்கொண்டுள்ளார்.

......

## கோரிக்கை

(நெடுந்தீவு)

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் நெடுந்தீவு பல நோ. கூ. சங்க இயக்குநர் சபையைத் தெரிவு செய்யும்வரை ப. நோ. கூ. சங்கத்தின் தற்காலிகஇயக்குநர் சபையாக நெடுந்தீவு பொதுசேவைக் கூட்டுறவுச்சங்கச்செயற்குழுவை நியமிக்கவும் பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் விரும்பும் பட்சத்தில் மேற்படி சங்கத்தைப் ப. நோ. கூ. சங்கமாக மாற்றியமைக்க உதவுமாறும் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதித்தலைவர் திரு. நா. இலட்சுமணரர்சா யாழ். மாவட்ட அமைச்சிடமும் கூட்டுறவு அமைச்சிடமும் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர்கள் புரட்சிவீரர்களாக்கப்பட்டதற்கு 4-வது தமிழாராய்ச்சி மாநாடுதான் காரணம்

## அஞ்சலிக் கூட்டத்தில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''ஜனவரி 10-ம் திகதியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர வேண்டும் 6 ஆண்டுகளுக்கு முன் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக நடந்த படுகொலைதான் தமிழ் இனத்தைச் சிந்திக்கத் தூண்டியது கடந்த 30 வருடங்களாகத் தமிழ்மக்களால் நடாத்தப்பட்ட போராட்டத்தின் போதும் மக்கள் உணராத ஒன்றை உணரவைத்தது 4வது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடுதான்''

1974-ம் ஆண்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 4-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின்லும் 76-ம் ஆண்டு புத்தளம் பள்ளிவாசலிலும் 77-ம் ஆண்டு இனக்கலவரத்தின் போதும் 79-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதச் சட்டம் அவசரகாலச் சட்டத்தின் போதும் படுகொலை செய்யப்பட்டோரை நினைவு கூரும் முகமாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம் யாழ். மாநகர சபை மண்டபத்தில் பேராசிரியர் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெற்றது திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

''1974-ம் ஆண்டு நடைபெற்றதமிழாராய்ச்சி மகாநாடு ஒரு சிங்கள ஆராச்சி மகாநாடாக நடந்திருந்தால் இப்படிப்படுகொலைகள் நடந்திருக்குமா?

''அன்று புத்தளம் பள்ளிவாசலில் படுகொலைசெய்யப்பட்ட 9 பேர் குறித்தும் விசாரணை நடாத்தப் பட்டதா? ஆனல் அனுராதபுரத்திலுள்ள ஒருபிக்கு கொலை செய்யப்பட்டதற்காக விசாரணைக்கமிஷன் நடாத்தப்படுகிறது.

''தமிழ் விரிவுரையாளர்களைக் கேவலமாகப் பேசிய கைத்தொழில் விஞ்ஞன அலுவல்கள் அமைச்சருக்கு மாபெரும் வரவேற்பளித்தனர்.

''அன்று சுதந்திரக்கட்சியினருக்கு கொடிபிடித்தவர்கள் இன்று கைத்தொழில்அமைச்சருக்கு மாபெரும் வரவேற்பளித்து பீடிக்கோட்டாவைப் பெறமுயல்கிறார்கள்.

'கடந்தகாலத்தில் நாம்படித்த பாடத்தை மறந்துவிடக் கூடாது. அதனுல் நாம் ஒற்றுமையாகச்செயல்படவேண்டியவர்களாக இருக்கிறேம்.

''எங்களுக்குள், செயல்படும் வேகத்தில் கருத்துவேற்றுமை இருக்குமே தவிர எமது லட்சியத்தில் வித்தியாசம் இருக்க முடியாது. நாம்கொண்ட லட்சியத்தை அடைய எம் மத்தியில் ஒற்றுமை முக்கியமாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

### புரட்சிக்காரர்

''74ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற படுகொலைதான் தமிழ் மக்களைப் புரட்சிக்காரர்களாக மாற்றியது. அதனுல்தான் தம்பி சிவகுமாரன் போன்ற புரட்சிவீரர்கள் தோன்றினர்கள்.

''கூட்டணியினர் உண்மையான அகிம்சை வாதிகளாக இருந்தால், பயங்கரவாதஇளைஞர்களை ஒழித்துக்கட்ட உதவ வேண்டும்'' என்று ஜனதிபதி எனக்குக் கடிதம் எழுதினர். சுதந்திர மோராட்டத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த இளைஞர்களைக் காட்டிக்கொடுக்க நாம் விரும்பவில்லை என்று நான் ஜனதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அத்தோடு அது முடிவடைந்துவிட்டது.

மறியல்போராட்டம்நடத்தியதற்காக கொழும்பில் பல தொழிற்சங்கவாதிகள் தாக்கப்பட்டனர். இதைப்பற்றிப் பாராளுமன்றத்தில் பேசும்படி சிறிமா அம்மையார் என்னைக் கேட்டுக்கொண்டார். அன்று எம்மை அடைத்துவைத்தவர்கள் இன்று எம்மை நாடி வருகிறார்கள். ஆனல் சத்தியத்திற்காக எதையும் நாம் செய்யத் தயங்கமாட்டோம். அக்கிரமம் எங்கிருந்து வந்தாலும் அதை எதிர்க்க நாம் தயங்க மாட்டோம்.

### படுகொலை விசாரிக்கக் கமிஷன் எங்கே?

''74-ம் ஆண்டு நடைபெற்ற படுகொலைகள் பற்றி விசாரணைக் கமிஷன் நடத்துவதாக ஒத்துக்கொண்ட திரு. ஜே. ஆர். இன்று ஜனதிபதியாக வந்தவுடன் கைவிட்டுவிட்டார் இதுபோன்ற படுகொலைகள் நடைபெறுது தடுக்க வேண்டுமானுல் நாம் எமக்கென ஒரு தனிநாடு அமைக்கவேண்டும். தமிழ் ஈழத்தைக் காப்பாற்ற தமிழ் எல்லையைக் காப்போம் அதை நிறைவேற்ற நல்ல சந்தர்ப்பம் வந்துவிட்டது. கிழக்கில் எம் மக்கள் குடியேற வேண்டும். நாம் குடியேறத் தவறினுல் அங்கு சிங்களவர்வள் குடியேற்றப்படுவார்கள்!

''மகாவலித் திட்டம் என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்ற நாம் அனுமதிக்கக் கூடாது. அங்கு குடியேறும் பணியில் தமிழ் மக்கள் முன்னிற்க வெண்டும்.

''நாம் அங்கு குடியேறத் தவறும் பட்சத்தில் எமது மண்ணை நாம் இழந்தவர்களாவோம். அதனுல் எதிர்காலச் சந்ததியினர் எம்மைத் தூற்றவேண்டிய நிலையும் உருவாகும். இதைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் மனதில் கொண்டு செயல்படவேண்டும்'' என்றர். (கொ)

## விவசாய ஆசிரியர்சங்கம்

(கல்முனை)

கல்முனைவட்டாரப் பாடசாலைகளில் விவசாய முயற்சிகளை இலகுபடுத்தும் வகையில் விவசாய ஆசிரியர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (வெ)

## "பாலசுப்பிரமணியம் மறைவு எமக்குப் பேரிழப்பு"

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னுள் பொதுச் செயலாளரும், தமிழ்த் தொழிற்சங்கவாதியும், சட்டத்தரணியுமான திரு. நா. பாலசுப்பிரமணியத்தின் அகால மறைவையொட்டி தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தர் வெளியிட்ட அனுதாபச் செய்தி:-

''இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலமாகப் பணியாற்றிவந்த ஆசிரியர் திரு. நா. பாலசுப்பிரமணியம் அகால மரணமான செய்தி அறிந்து நாம் அதிர்ச்சியடைந்தோம். மிக உற்சாகத்துடனும், திறமையுடனும், இலட்சிய நோக்குடனும் தொழிற் சங்கத்துறையில் தீவிரமாக ஈடுபட்ட, தமிழர் ஆசிரியர்கள் அனைவரையும் ஒரே அணியின் கீழ்க் கொண்டுவரவும், தொழிற் சங்கத்தை வளர்க்கவும் அயராது உழைத்துவந்த சிறந்த தமிழ்த் தொழிற்சங்கவாதியின் இழப்பு ஆசிரியர் உலகிற்குமட்டுமல்ல, பொதுவாக தொழிற்சங்க உலகிற்கே பேரிழப்பாகும். அவர் போன்ற ஆற்றல் மிக்க தொழிற் சங்கவாதி தமிழ் உலகிற்குக் கிடைப்பது அரிது. அன்னரின் மறைவால் துயரக் கடலில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்திற்கும், சிறந்த தொழிற் சங்க வழிகாட்டியை இழந்திருக்கும் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும், தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் சார்பில் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேம்.

## விசுவமடுவில்

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தன்று மாலை தர்மபுரம் விஸ்வமடு ஆற்றங்கரையில் திரு. க. விசுவலிங்கம் தலைமையில் பொங்கல்விழா நடைபெறவுள்ளது.

விசுவமடு அறிவு வட்டத்தால் நடாத்தப்படும் இவ் விழாவில் ஈழவேந்தன், டொமினிக் ஜீவா ஆகியோர் உரையாற்றுவர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கொ)

## நீ வாழ்ந்திடுவாய்!

பாலா! நீ சேற்றுப்
 பறிபோன செய்தியினை
ஏலாதே ஏற்றேம்; ஆம்,
 இதயம் படைத்தவர்கள்
எல்லோரும் ஏங்கி
 இரங்கிக் கண்ணீர் வடித்தோர்
காலம் பார்க்காதங்கே
 வந்த கொடுங்காலன்,
பாவம் பார்க்காதே
 பறித்தெடுத்தான் உன்உயிரை!
கோர நெருப்பினிலே
 உன் உடலும் சங்கமிக்கும்
நேரம் இதுவா? ஆ!
 நேசம் மிகுந்தவனே!
மச்சான் -- எனவே
 உகிர்க்கின்ற அன்புமொழி
அச்சடித்து அன்பில்
 அளைந்து நீ தந்த மொழி
கூ...என்று வந்த
 கொடிய இரைச்சலிலே
ஓ......என்று சங்கமித்துப்
 போவதா? ஆ! இந்த
மாந்தனது வாழ்க்கை
 மணற்சிற்றில்! அச்சிற்றில்
முட்டுப்பட்டாலே
 முழுதும் சிதைந்துவிடும்
எட்டுத் திசையும்
 இசை விளங்கும் உன் சேவை
கட்டி வளர்த்தெடுத்த
 ஆசிரிய சங்கம் - இவை
நில்லா உலகில்
 நிலைக்கின்ற தத்துவமாய்
எல்லார் மனத்தினிலும்
 வாழும் நீ வாழ்ந்திடுவாய்

"சத்தியசிலன்"
ஓர் ஆசிரிய நண்பன்

## யாழ். செயலகத்தினரின் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகம் பொங்கல் கலைவிழாவினை இம் மாதம் 16-ந் திகதி புதன் கிழமை மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச்செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கலந்துகொள்வார்.

யாழ்.செயலக கலாச்சார மன்றம் இக்கலைவிழாவை இவ்வருடத்தின் முதல் கலை நிகழ்ச்சியாக ஆரம்பித்து மேலும் பல கலைநிகழ்ச்சிகளை இவ்வருடத்தில் நடாத்த உத்தேசித்துள்ளது. இதன் மூலம் மக்களிடையே கர்நாடகஇயல் இசையில் ஈடுபாட்டினை ஊக்குவித்தற்பொருட்டும், இலக்கிய விழாக்கள் எடுப்பதன் மூலமும், கலாச்சாரப் பரிவர்த்தனை ஏற்படுத்தியும், இம் மாவட்டத்தின் பாரம்பரிய கலைகளை ஊக்குவித்து இசைக் கலைஞர்களின் திறமைகட்கு மேன்மேலும் சந்தர்ப்பம் அளிக்கத் தீர்மானித்துள்ளது,

பொங்கல் கலைவிழாவில் ஈழத்துகலைசிறந்தஇசை, நடன கலைஞர்களினதும் நாதஸ்வர வித்துவான்களினதும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அரசாங்க அதிபர் மங்கள விளக்கேற்றி இவ்விழாவினை ஆரம்பித்துவைப்பார். இதைத்தொடர்ந்து சாகித்திய சிரோன்மணி வீரமணிஐயர் இயற்றிய பொங்கல் வாழ்த்துபாவை யாழ் நுண்கலைக்கல்லூரி விரிவுரையாளர் திருமதி சரஸ்வதி பாக்கியராசா வழங்குவார். அடுத்துதிருக்கேதீஸ்வர ஆதீன வித்துவானுகிய நாதஸ்வர வித்துவான் மு. பஞ்சாபிகேசன் குழுவினர் நாதஸ்வர இன்னிசை அளிப்பார்கள் தொடர்ந்து யாழ். பல்கலைக் கழக நுண்கலைக் பிரிவு மாணவிகளின் ''பல்லியம்'' இடம் பெறும். அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி நாட்டிய நிறுவனத்தின் நடன ஆசிரியர் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டியாஞ்சலியும் திரு. சு. அரியநாயகத்தின் கலைக்கோவில் நாட்டிய நிறுவனத்தின் சிவதாண்டவ நாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெறும், (கொ-அ)

## கோண்டாவிலில்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம் அளிக்கும் பொங்கல் கலை விழாவில் சொற்பொழிவுகள் பட்டிமன்றம் பரதநாட்டியம் மெல்லிசை விருந்து திரைப் படக்காட்சி விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம் பெறும்.

பொங்கல் தினமான 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ள இக் கலைவிழாவுக்கு நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றர்.

பொங்கலன்று மாலை 3-50 மணிக்கு திரு. இ. பாலசுந்தரம் தலைமையில் சங்கீத இசையுடன் விழாத் தொடங்கும். செயலாளர் அறிக்கையைத் தொடர்ந்து திருவாளர்கள்: சி. கணேசரத்தினம், ச. பொ. பாலசிங்கம், அ. ஜெயரத்தினம், க. சிவபாதம், கு. ஜெயந்தன், சி, சுப்பையா, ஆ. சிவபாலன், த. நக்கீரன், ச. கனகலிங்கம், இ. குணராஜா க. தியாகமூர்த்தி ஆகியோர் சிற்றுரை நிகழ்த்தவுள்ளனர்.

''சமுதாயத்திற்கு நிலைத்த பயனைத்தருவது சமூகத் தொண்டா? சமயத்தொண்டா? மொழித் தொண்டா? என்ற தலைப்பில் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் பட்டிமன்றம் ஒன்றுநடைபெறவுள்ளது.

மெல்லிசை நிகழ்ச்சியில் வ. இ. ச. ஜெயபாலனதும், அகளங்கனதும் பாடல்கள் திரு. உமாகாந்தன் குழுவினரால் இசைக்கப்படும்.

''கலைக்கோயில்'' உரும்பராய் நாட்டிய அக்கடமியினரின் ''நாட்டியாஞ்சலி'' நிகழ்ச்சியில் கீதாஞ்சலி சிவதாண்டவம், வசந்தோற்சவம், ராதா-கிருஷ்ணன், குறவன் குறத்தி என்பனவும் என்பனவும் ''சீதாபகர்ணம்'' என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

14-ந் திகதி காலை 7 மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். (நா)

## உழவர் விழா

(நெடுந்தீவு)

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்கம் உழவர் விழா நடாத்தவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை திரு. க. தியாகலிங்கம் செய்துவருகின்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம்பகம் கொலை வழக்கு:

# "அன்னபூரணத்தின் மரண வீட்டிற்கு எதிரி வந்திருந்தார்"

### சகோதரன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அன்னபூரணத்தின் மரண வீட்டிற்கு காலையில் எதிரி வந்திருந்ததாக நேற்று முன் தினம், கரம்பகம் கொலைவழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரனை கந்தையா நாகராசா கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதி மன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜமில் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

எதிரியின் பள்ளித்தோழனை மகேந்திரன் நேற்றுமுன் தினம் சாட்சியமளித்தார்.

#### படிக்கும்போது சிநேகிதம்

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் சாட்சியமளித்த மகேந்திரனை குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: நீர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர்?

பதில்: ஆம்.

கே: எப்போது சேர்ந்தீர்?-

ப: 79ம் ஆண்டு.

கே: அதுவரை என்ன செய்தீர்?-

ப: தோட்டம் செய்தேன்.

கே. உமது கமம் எங்கிருக்கிறது?-

ப: ஈச்சங்காட்டிலும் பனங்காட்டிலும்.

கே: உசன் மகாவித்தியாலயத்தில் படித்தீர்?

ப: ஆம்.

கே: எப்போது?

ப: ஞாபகமில்லை.

கே: அன்னபூரணத்துடன் சிநேகிதமாக இருந்தீர்?

ப; படிக்கும்போது சிநேகிதம்.

கே: கதைத்தீரா?

ப: ஒரே வகுப்பில் படித்தோம்.

கே. அன்னபூரணத்தின்வீட்டிலிருந்து உமது வீடு எவ்வளவு தூரம்?

ப: ஒன்றரை மைல்.

கே: பள்ளிச் சிநேகிதியின் மரணவீட்டிற்கு போனீரா?

ப: காலையில் போய்ப்பார்த்தேன். பிரேதம் எடுக்கும்போது போகவில்லை.

கே: வயல்வெளியில் அன்னபூரணத்தின் உடலைப் பார்த்தீர்?

ப: ஆம்-

கே: பொலிஸார் வந்தபோது அங்கு நின்றீரா?

ப: இல்லை.

#### பத்துவருட சிநேகிதம்

கே: எதிரி உமதுசிநேகிதன்?

ப: 10 வருடமாக தெரியும். படிக்கும்போது சிநேகிதம்.

கே: எப்போது சிநேகிதமாக இருந்தீர்?

ப: கொலைக்கு முன்னல்.

கே: பின்னர்?

ப: கண்ட இடத்தில் கதைப்பதுண்டு.

டாக்டர் வி. ஏ.மகேந்திரன் குறுக்குவிசாரணையில் கூறியதாவது: சம்பவம் நடந்த இடத்தில் பிரேதபரிசோதனை நடத்தினேன். சடலம் வளைந்த நிலையில் கிடந்தது. முகம்பக்கவாட்டில் கிடந்தது. 9ம் தேதி மாலை மூன்றரை மணிக்கு பிரேத பரிசோத[illegible] நடத்தினேன். பகல் முழுவதும் சடலம் அந்த இடத்தில் இருந்தது.

கே: 8 மணி முதல் 24 மணி நேரத்திற்குள் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்றீர்?

ப: ஆம்.

கே: இரவு 10-30 மணிக்கு நடந்திருக்கலாம் என்றீர்?

ப: ஆம்:

கே: திட்டவட்டமாக அப்படிக் கூறமுடியாது?

ப: ஆம்.

அரச சட்டத்தரணி: தாம் பத்திய உறவுக்கு பின்னர் அன்னபூரணம் நடந்திருக்கிறரா?

ப: அதற்கான அறிகுறிகள் இல்லை.

#### தங்கச் சங்கிலி

கந்தையா நாகராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "இந்த சங்கிலி எனது சகோதரிக்குச் சொந்தமானது. இதனை விலைக்கு வாங்கிய நாள் முதல் சகோதரி அணிந்திருந்தார். நகைக்கடையில் சம்பவத்தின்பின் இந்தத் தங்கச் சங்கிலியை சப்இன்ஸ்பெக்டர் கதிர்காமநாதன்பெற்ருர். நானும் எதிரியும் நகைக் கடைக்கு இன்ஸ்பெக்டருடன் சென்ருேம்.

கே: எங்கிருந்து சங்கிலியை எடுத்தார்கள்?

ப: நகைக்கடை முதலாளி சோக்கேஸிலிருந்து எடுத்துக் காட்டினர்.

கே: அது உமது தங்கச்சி அன்னபூரணத்தின் சங்கிலி?

ப: ஆம்.

கே: இது புதுச் சங்கிலியா? பழையசங்கிலியா?

ப: புதிய சங்கிலியாக இருக்கிறது.

கே: நகைக்கடையில் இன்ஸ்பெக்டர் சங்கிலி எடுத்தபின் என்ன நடந்தது?

ப: வீட்டிற்கு போனேம். பின் எதிரி விட்டைபோனேம். நான் என் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

கே: அன்று பொலிஸ் வாக்குமூலம் கொடுத்தாரா?

ப: ஞாபகமில்லை.

#### வயலில் சடலம்

கே: நீங்கள் எங்கு படுப்பீர்கள்?

ப: நான் அடுப்படிக்குள் படுப்பேன். தகப்பனர் ஹோலில் படுப்பார். தாயார் சகோதரிகள் அறைக்குள் படுப்பார்கள். சம்பவம் நடந்த இரவு 3 மணிக்கு தாயும், சகோதரியும் எழுந்து அன்னபூரணத்தைக் காணவில்லைஎன்ருர்கள், நாங்கள் வளவிற்குள் தேடிப் பார்த்துவிட்டு விடியட்டும் என்று இருந்தோம். பின்னரும் தேடிப்பார்த்தோம்.

காலை 7-30 மணிக்கு பள்ளிப் பிள்ளைகள் வந்து வயலுக்குள் ஒரு பெண்ணின்சடலம்இருப்பதாகக் கூறினர்கள். பின் 8 மணிபோல் பொலிஸிற்குப் போனேம். நான்தான் பொலிஸிற்கு முதலில் தகவல்கொடுத்தேன்.

கே: பொலிஸ் முறைப்பாடு 10-55 மணிச்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

ப: நான் 8 மணிக்கு பொலிஸிற்குப்போனேன்.

கே: அப்பட்டமான பொய் சொல்கிறீர்?

ப: நான் பொய் சொல்லவில்லை. ஏன் பொய் சொல்ல வேண்டும். பொய்சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கே: வீட்டில் ஆண்பிள்ளை நீர்தானே?

ப: அம்மாவின் தகப்பனரும் இருக்கிருர்.

கே:ஆண்பிள்ளை நீர்தானே?

ப: ஆம்

கே: வீட்டின் நன்மை தீமைகளை நீர் கவனிப்பீர்?

ப: ஆம்

கே: உமது சகோதரி கர்ப்பமென்று எப்போ அறிந்தீர்?

ப: டாக்டர் பிரேதபரிசோதனைசெய்தபின்.

#### கர்ப்பிணி

நீதிபதி: முசுப்பாத்திக்குக் கேள்விகள் கேட்கவில்லை. கேட்டகேள்விகளுக்குப் ப[illegible] சொ[illegible]லவேண்டும். கேள்விகள் சரியில்லையென்ருல் நான் தடுப்பேன். மற்றும்படி நீர் கேள்விகளுக்கு மறுமொழி சொல்ல வேண்டும்.

உமது தங்கை ஆறுமாத கர்ப்பிணியாக இருந்தார்?

ப: எத்தனை மாதம் என்று தெரியாது.

கே: உமது சகோதரி எப்போதாவது தான் கர்ப்பிணி என்று சொல்லவில்லையா?

ப: இல்லை.

கே. உமது சகோதரியின் உடலில் வித்தியாசம் காணப்படவில்லையா?

ப: இல்லை

கே: மற்ற சகோதரிசொல்லவில்லையா?

ப: இல்லை.

கே: உமது வீட்டில் ஒருவருக்கும் அவர் கர்ப்பிணி என்று தெரியாது?

ப: ஆம்

கே: சம்பவத்திற்கு 6 மாதத்திற்கு முன் சகோதரி நோயாக இருந்தாரா?

ப. இரண்டு பல்லுப்பிடுங்கினர்.

கே: வாந்தி காய்ச்சல் இருந்ததா?

ப: தெரியாது.

கே: உமது சகோதரி எவருடனுவது தொடர்புவைத்திருந்ததாகக் கூறினரா?

ப: இல்லை.

#### மரண வீட்டுக்கு எதிரி வந்தார்

கே: ஏதாவது தொடர்பு வைத்திருந்தால் உமக்குச் சொல்லியிருப்பார?

ப: அதுபற்றி நான்சொல்ல இயலாது. அவர் சொல்லியிருப்பாரா இல்லையா என்று தெரியாது. இப்படியான விஷயங்களை ஒளித்துவைத்திருப்பார்கள்.

கே:சம்பவம் நடந்தபின்னர் நீதிபதிமுன் சாட்சியமளித்தீர்?

ப: ஆம்

கே: எதிரி மரணவீட்டிற்கு வந்திருந்தாரா?

ப: காலையில் வந்திருந்தார்.

கே: அதன்பின் பல தடவை வந்தாரா?

ப: இல்லை.

கே: எதிரியை சம்பவத்தின் பின் நீதிமன்றத்தில் சந்தித்தீரா?

ப: இல்லை பொலிஸ்நிலையத்தில் சந்தித்தேன்.

கே: கோட்டிற்கு செல்லவில்லை?

ப: இல்லை.

கே: சாட்சியமளித்த மகேந்திரன் உமது நண்பர்?

ப: ஆம்.

கே: வீட்டிற்கு வருவதுண்டு?

ப: வருவதில்லை, அலுவல் இருந்தால் வருவார்?

கே: அவரை எங்கே சந்தித்தீர்?

ப: பஸ்ஸில், மார்க்கட்டில்.

கே:சம்பவத்தின்முன் எங்கே சந்தித்தீர்?

ப: ஞாபகமில்லை.

கே: பின்னர் சந்தித்தீரா?

ப: ஞாபகமில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (க)

---

## காரை. டிப்போ புதிய சேவை

(பண்டத்தரிப்பு)

காரைநகர் இ. போ. ச. டிப்போ காரை நகரிலிருந்து பண்டத்தரிப்பு மாதகல் ஆகிய இடங்களுக்கு ஊடாகத் தொண்ட[illegible]ஒரு பஸ்சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (அ)

---

## தமிழ்ப் பிரதேச எல்லைப் பாதுகாப்பு:

# சீனவில் விளக்கியதாக யாழ். மேயர் தகவல்

(யாழ்ப்பாணம்)

'சீனவின் எல்லையைக் காப்பாற்றுவதற்காக அங்கு நீண்ட சுவர் அமைக்கப்பட்டது. இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசம் மக்களும் தமது பாரம்பரிய பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணத்தின் எல்லையைக் காப்பாற்றுவதற்காக போராடிக் கொண்டிருக்கிருர்கள் என்பதை எனது விஜயத்தின்போது சீன மக்களுக்கு எடுத்துரைத்தேன்.

இவ்வாறு சீன, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிம யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் யாழ். மாநகர மண்டபத்தில் யாழ் மாநகரசபை உறுப்பினர்கள், ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

உதவி முதல்வர் திரு. பி. எவ். சேவியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

சீனவில் வாழுகின்ற மக்கள் நேரத்தை வீணுக்காது நாட்டுக்காக உழைக்கிருர்கள். இளைஞர்களும் யுவதிகளும் வேலைக்குச் சேர்க்கப்பட்டு ஒன்ருக வேலை செய்கிருர்கள். அப்படி இந்தபோதும் அங்கு ஒழுக்கம் கூடுதலர்கப் பேணப்படுகிறது,

1917 ம் ஆண்டின் பின்தான் சீன முன்னேற்றமடைந்தது. மாஓவின் தலைமையை ஏற்ற சீனமக்கள் அவரின் கட்டளையை ஏற்று ஓரணியில் நின்று நேர்மையுடன், தூய மனத்துடனும், செயல்பட்டதால் அத்துடன் செயல்பட்டதால் அந்தநாடு அரசியலிலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைய முடிந்தது.

#### சிங்கப்பூரில் வாழுகின்ற தமிழர்கள்

'சிங்கப்பூரில் வாழுகின்ற தமிழ் மக்கள் மிகவும் கௌரவமாகத் தலைநிமிர்ந்து வாழ்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சிங்கப்பூர்நகரம் அழகா புரியாகக் காட்சியளிக்கின்றன. அங்குள்ள தொழிலாளர்களின் ஒத்துழைப்பின தான் அந்நாடு மிக அழகாக இருக்கக் கூடியதாக இருக்கிறது.

'மின்சாரம் பழுதடைந்தாலும் 10 நிமிடங்களுக்குள் திருத்தப்பட்டுவிடும். மறுதினம் மின்சாரம் பழுதடைந்ததற்கான காரணம் உரியவர்களுக்கு அறிவிக்கப்படும்:

'இங்குள்ள சபைஊழியர்களும் அதிகாரிகளும்மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டும் நகரின் அபிவிருத்தியை மனத்தில் கொண்டு செயல்படவேண்டிம். (கொ-கு)

---

## மாசார் கொலைவழக்கு:

# 1ம் எதிரி வராததினல் பிணைப் பணம் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

மாசார் கொலைவழக்கில் 1-ம் எதிரி சண்முகநாதன் நீதிமன்றம் வராததினல், அவருக்காக பிணை நின்றவரான க. விரவாகுவின் பிணைப்பணம் 2000 ரூபா -பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜமில் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் 2-வது எதிரி மட்டும் நீதிமன்றம் வந்திருந்தார். 1-ம் எதிரி வரவில்லை. 1-ம் எதிரிக்கு பிணைநின்றவரான க. வீரவாகு நீதிமன்றம் வந்திருந்தார்.

பிணைப்பணமான 2000 ரூபா பறிமுதல் செய்திருப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

இந்த பறிமுதல் அடுத்த தவணைவரை பின்போடப்பட்டுள்ளதாகவும் அதற்கிடையில் 1-ம் எதிரியை பிடித்து ஒப்படைக்கவேண்டும் என்றும் நீதிபதி கூறினர்.

பிடி ஆணை பிரதி தரப்படுமென்றும் 1-ம் எதிரியைப் பிடித்துகிட்டியபொலிஸ்மூலம் இங்கு கொண்டுவரலாம் என்றும் நீதிபதி தெரிவித்து வழக்கைப் பெப்ரவரி27-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

---

## இலவச பாடப்புத்தகம்

(யாழ்ப்பாணம்)

இலவசமாக வழங்கப்படவுள்ள பாடசாலைப் புத்தகங்களை அந்த அந்த வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாக வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

பாடசாலைப் புத்தகங்களை எடுத்துச்செல்வதற்காக இலங்கையின் வடபிரதேச இராணுவத்தினர் வாகனஒழுங்குகளைச் செய்துதருவதாக உறுதி கூறியிருந்தும் கடைசி சந்தர்ப்பத்தில் அவ்உதவி கிட்டவில்லை என்றும் இதனல் தனிப்பட்ட சிலரின் பொறிகளிலும், ப. நோ. கூ. சங்கத்தின் லொறிகளிலுமே நூல்களைக்கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

......

## அ. தி. மு. க, ஆலோசனை

(சென்னை)

லோகசபை தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விபற்றி அ.இ.அ.தி.மு. கழக சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் நேற்று நடைபெறற்து.

தேர்தலுக்கு முன்பும் பின்பும் எழுந்துள்ள நிலைமைகள் பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது. கூட்டத்துக்கு முதல் அமைச்சர் திரு. எம். ஜி, ராமச்சந்திரன் தலைமை வகித்தார்.

எதிர்காலத்தில் கட்சி மேற்கொள்ளவேண்டிய உத்திபற்றியும் ஆராயப்பட்டது.

---

## பொங்கல் விழா

(கீரிமலை)

கீரிமலை சிவநெறிக்கழகத்தின் பொங்கல்விழா கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோவில் முன்றிலில் எதிர்வரும் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3 - 30 மணிக்கு சிவநெறிக்கழகத்தின் பிரதித்தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் ஜே. பி. தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் இளமுருகனர் நினைவுக்கவிதைப் போட்டியிற் பரிசு பெற்ற பிரம்மஸ்ரீ வ.குக சர்மா பாராட்டைப்பெறவுள்ளார் சிவநெறிக்கழகக் கவிஞர் கவிமணி வி. கந்தவனம் பாராட்டுரை நிகழ்த்துவார்.

"சிவநெறித் தெளிவு" என்ற பொதுத்தலைப்பின்6 உப பிரிவுகளில் திரு. ச, விநாயகமூர்த்தி கவிஞர் செ. கதிரேசர் பிள்ளை பிரமஸ்ரீ நா. சுப்பிரமணியம் சைவப்புலவர் சு. செல்லத்துரை திரு. வி. சங்கரப்பிள்ளை பிரமஸ்ரீ வ. குக சர்மா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்கள் (கொ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. Potrays a man with a mission... gathering a team of SKYRIDING daredevils to rescue a kidnapped wealthy American family!!
They soared from the skies to stage the most daring rescue ever filmed !
**SKY RIDERS**
See...the most exciting, dangerous and fastest Air drama...FULL OF ACTION Co-starring: SUSANNAH YORK...ROBERT CULP and CHARLES AZNAVOUR
Color byDELUXE

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
**தாயில்லா குழந்தை**

100-வது வெற்றித்திருநாளை நோக்கி
**சாந்தி** (யாழ்நகர்) தினசரி 10-30,2-30
போன்: 7642 6-30,9-45
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி
நடித்த
**டாக்ஸி டிரைவர்**
வண்ணத்திரையோவியம்

LAST 3 DAYS
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15
4-45,7-15&9-45p.m.
Terrence Hill Bud Spencer in
**CRIME BUSTERS**
பொங்கல் விருந்தாக 15-ந் திகதி முதல்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி நடித்த
உள்ளத்தை உருக்கும் காதல் திரையோவியம்
**தேவதாஸ்**

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி, ப. 2-30, 6-15, 9-15
சிவாஜிகணேசன்-சுஜாதா
நடித்த
**தீபம்**
(வெள்ளிவிழாச் சித்திரம்
(வர்ணக்கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
4-வது ஜனத்திரள் வாரம்
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறுள்!
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா
நடித்த
**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி மஞ்சுளா நடித்த
**எங்கள் தங்க ராஜா** (கலர்)

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
**ஷண்முகப்பிரியா**

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 28-ம் திகதி
சனிக்கிழமை
12-1-1980

மேடம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு, வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும், சுகபோக தினம்.

இடபம்:- வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும், ஏக்கத்தின் சாயல் பாதிக்கும், உடல்நலனும் பாதிக்கப்படலாம், சுகாதாரம் நன்று.

மிதுனம்:- எதிர்பார்த்த செய்திக்கிடமுண்டு, நீண்ட நாள் மனக்குறை நீங்குவதற்கு இடமுண்டு, பிதாவழி ஆதரவும் உண்டு.

கடகம்:- கடமை புரியுமிடத்தில் முன்னேற்றம் தொடர்ந்து வரும், வாழ்க்கையில் வசதிகள் பெருகும், இடமாற்றமும் ஏற்பட இடமுண்டு.

சிங்கம்:- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும், புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கிடமுண்டு, சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கும்.

கன்னி:- கழுகுப்பார்வை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், நிதிநெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில்.

துலாம்:- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், அவசர முடிவைத் தவிர்க்கவும், சிந்தனை தவிர்த்து அமைதியுடன் இருக்கவும்.

விருச்சிகம்:- முத்தான சந்திப்பு ஒன்று கிட்டும், அரசியலிலும் ஆர்வம் பிறக்கும், பல பிரச்னைகளுக்கு இன்று முடிவு காணப்படும்.

தனுசு:- ஆணைப் போக்கினல் அடிசறுக்க நேரிடும், அவப்பெயருக்கிடமுண்டு, தொழில் விடயத்தில் அவதானம் நன்று.

மகரம்:- பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும், இன்று புதிய முதலீடு செய்வதற்கு உகந்த நாள், அன்னை அன்பும் தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்:- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு, இலாபகரமான தினம்.

மீனம்:- சிலருக்கு அகால போசனமும் அன்னிய வாசமும் ஏற்படலாம், எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருக்கவும், சுமாரான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
சு. வலுப்பிள்ளை

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - லதா
**உழைக்கும் கரங்கள்**

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். -வாணிஸ்ரீ
ஊருக்கு
**உழைப்பவன்**

## கைத்துப்பாக்கிவைத்திருந்ததாக வழக்கு:

# எதிரி விடுதலை!

(புத்தளம்)

அனுமதிப்பத்திரமின்றி கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு புத்தளம் நீதவான் திரு. ஜி. கூடவத்த ஆராய்ச்சிமுன்னிலையில் 2 தினங்கள் நடைபெற்றது.

இவ்வழக்கு 79 ஜூன் 20ந் தேதி புத்தளம் பஸ்நிலையத்தில் முண்டலைச் சேர்ந்த ஏ. அனுரா ஜெயதிலகா, கைத்துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

எதிரிசார்பில சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணிகள் எஸ். எம். அபிதார், ஏ. ரணசிங்கா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

விடுதலையான எதிரி நீதிமன்றத்திற்கு வெளியில் வந்தபோது மீண்டும் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டார்.

கைதானதுபற்றி சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

எடனடியாக அவரை விடுதலைசெய்யுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன், எதிரிக்கு எதிராக மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யவிருப்பின் அவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிசார் அறிவிக்கலாம் எனத் தெரிவித்தார். (க)

## சங்கானையில் மீண்டும் மக்கள் வங்கி

(சுழிபுரம்)

சங்கானையில் மக்கள் வங்கிக்கிளை மீண்டும் இம்மாதம் 16 ந் திகதி புதன்கிழமை முதல் திறக்கப்பட்டு சகல வேலைகளும் வழமைபோல் நடைபெறவுள்ளது. தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாளன்று திறக்கப்படவுள்ள இவ்வங்கி அலுவலக அதிபராக திரு. ஏ. அம்பலவாணர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (அ)

......

## மனனம் செய்து சொன்னவருக்குப் பரிசு

(சுழிபுரம்)

சுழிபுரம் ஐயனர் ஆலயத்தில் தினமும் பங்கு கொண்டு திருவெம்பாவைம் பாடல்களை மனனம் செய்து சொன்னவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. திருமதி மா. கதிரவேலு அம்மையார் பரிசில்களை வழங்கினர். திரு. மா. மகாதேவன் திரு. சி. கிருஷ்ணன் திருவெம்பாவையின் சிறப்பைப்பற்றி சிறப்புரை யாற்றினர். திரு. இ. சதாசிவம் நன்றியுரை கூறினர், பரிசளிப்புக்குரிய பொருட்கள் சிவதர்ம வள்ளல் திரு, கனகராசா ஜே. பி.யால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (அ)

## நாதஸ்வரத்தில் திருமுறைப்பாடல்களை வாசித்தவருக்குப் பாராட்டு

(சுழிபுரம்)

வழக்கம்பரை அம்மன் கோயிலில் சென்ற ஒன்பது ஆண்டுகளாக மார்கழி மாத உதயப் பூசையின் போது திருமுறைப்பாடல்களை மட்டும் நாதஸ்வரத்தில் வாசித்துப் பணிபுரிந்து வரும் கலைஞர் எஸ். நடராசா பாகவதரின் சேவையைப் பாராட்டி பட்டமளிப்பு வைபவம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

......

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு திரு. எஸ், செல்லையா இம்மாதம் முதல் புதிய வைத்தியராக இடமாற்றம் பெற்று வந்துள்ளார் இவர் உப்புவெளி கிராம சபை ஆயுள் வேத வைத்தியசாலையில் கடமையாற்றியவராவார்.

இவர் நீண்ட காலமாக யாழ். மாநகரசபை ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி வந்தவர் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பாடசாலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிப்பது ஆசிரியர் அவர்களுக்குச் செய்யும் உதவியாகும். பொதுஅறிவிப் போட்டிகள் வினு-விடை சேகரித்தல் என்பன இவ்வகைப்பட்டன, நூலக விதிமுறைகளுக்குட்பட்டு நடக்க மாணவரைப் பயிற்றுவிக்கவும் இதன் மூலம் முடிகின்றது.

இலங்கை தேசிய நூலக சேவைகள்சபை கல்வியமைச்சு யுனெஸ்கோ தாபனத்தின் உதவியுடன் ஆரம்பித்துள்ள முன்னோடித்திட்டம் கல்வியமைச்சின் சிங்கள தமிழ்ப் பாடநூல்களின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் என்பன எமது நாட்டில் பாடசாலை நூலகங்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க கட்டத்தை ஏற்படுத்த வழிகோலும் முயற்சிகளாக அமைகின்றன. மொத்தக் குடித்தொகையில் பதினெட்டு வயதிற் குட்பட்டோரைக் கணிசமான பங்காகக் கொண்டிருப்பதும் தென்கிழக்காசிய நாடுகளில் கல்விகற்றோர் வீதம் அதிகமாக உள்ளது எமது நாட்டில் பாடசாலை நூலகங்களை விருத்தி செய்வ ஒரு தேசிய பொறுப்பாகும்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
பருத்தித்துறை
**கேள்விப்பத்திரம்**

பருத்தித்துறை ப.நோ. கூ. சங்கத்தில் சுமார் 4,000 வெற்றுச்சாக்குகள்விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திரத்தை வைப்புப் பணமாக ரூபா 50,-ஐயும், கேள்விப்பத்திரத்திற்கு ரூபா 2-ஐயும் கட்டி, இக்கந்தோர் நேரத்தில் பொதுமுகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறும் கடைசித்திகதி 26-1.80. கேள்விப்பத்திரம் 26-1-80க்சுப் பிந்தாமல் "பொதுமுகாமையாளர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும், கேள்விப்பத்திரம் அனுப்பப்படும்தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்" எனக்குறிப்பிடுதல்அவசியம்.

பொதுமுகாமையாளர்
பரு. ப. நோ.கூ. சங்கம்.
பருத்தித்துறை,
1980-1-09 4628

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...
டில்கா வாச்வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் சேல்மாடி .
424/1. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## பனமாவை விட்டு வெளியேற ஷா திட்டம்

வாஷிங்டன், ஜன. 11 ஈரான் முன்னாள் மன்னர் ஷா பனமாவைவிட்டு வெளியேறத் திட்டமிட்டு, வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் பொருட்டு அவரது விசேட தூதுவர் திரு. ரெபேர்ட், அமோஒவை ஷா வாஷிங்டனுக்கு அனுப்பியுள்ளார். (இ)




நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை

# ஏப். 28ல் சென்னை மாநகராட்சித் தேர்தல்: முன்னைய கூட்டணிகளே போட்டியிடும்

சென்னை, ஜன. 11 சென்னை மாநகராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதம் 28ம் திகதி நடைபெறும் ஊராட்சி நகராட்சி மன்றத் தேர்தல்கள் ஏப்ரல் 21ம் திகதி முதல் 28ம் திகதி வரைநடைபெறும்.

இம் முறை சென்னை மேயரின் பதவி 2 ஆண்டுகளாக நீடிக்கப்பட்டுள்ளது. இது வரை மேயரின் பதவிக்காலம் ஓராண்டாகவே இருந்தது. இதுவரை தெரிவு செய்யப்பட்டதுபோன்ற வகுப்பு வாரியான தெரிவு இம்முறையும் இடம் பெறும்போது கிறிஸ்தவர் ஒருவர் சென்னை மேயராகத் தெரிவு செய்யப்படுவார்.

ஏப்ரல் 30ம் திகதி அல்லது மே முதலாம் திகதி புதிய மேயர் பதவி ஏற்பார்.

இத்தகவலை தமிழக ஊராட்சித்துறை அமைச்சர் திரு. காளிமுத்து தெரித்தார்.

### முன்னையகூட்டணிகளே

இதே வேளையில் நடந்து முடிந்த லோகசபைத் தேர்தலில் போட்டியிட்ட கூட்டணிகளே மாநகராட்சி, நகராட்சி ஊராட்சி தேர்தல்களில் போட்டியிடும் என்று அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளன. (இ)

## நிஸங்கா இந்தியா விஜயம்

(கொழும்பு)

கல்வி உயர்கல்வி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்ன இந்தியா சென்றுள்ளார். அவர் நாடுதிரும்பும்வரை கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலக்க பதில் கல்வி, உயர்கல்வி அமைச்சராகப் பணியாற்றுவார். (வெ)

## பெண் கடத்தல் வழக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பெண்கடத்தல் வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜாமீல் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டு பெப்ரவரி 27ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## சைக்கிளில் பின்னோக்கி ஓடி நஸீர் புதிய சாதனை!

(யாழ்ப்பாணம்)

டுவிஸ்ட் நடனவீரர் ஜனப் பரீத்நஸீர் கொழும்பு காலி முகத்திடலிலிருந்து யாழ்ப்பாணம்வரை சைக்கிளில் பின் நோக்கி ஓடி புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை 4-55க்கு காலிமுகத்திடலிலிருந்து தமது சாதனை முயற்சியை ஆரம்பித்த ஜனப் நஸீர் நேற்றுக்காலை 8-10க்கு யாழ். மாநகாசபை வாசலை வந்தடைந்து தமது சாதனையை நிலைநாட்டினார்.

29 மணி 15 நிமிடங்களாக தொடர்ந்து ஓடி இச்சாதனையை நிலைநாட்டிய வீரரை உற்சாகப்படுத்துவதற்காக பல இளைஞர்கள் அவருடன் வந்து கொண்டிருந்தனர். வழிநெடுகிலும் அவருக்கு அமோக வரவேற்பும், ஆதரவும் வழங்கப்பட்டது, யாழ். மாநகர சபை வாசலில் யாழ். மேயர் திரு. இ. விசுவநாதனும் உறுப்பினர்களும் அவரை வரவேற்றனர்.

## 1,000 சுருட்டுக்கு ரூபா 50 இன்றேல் கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

"சுருட்டுவிலை அதிகரிக்கப் பட்டபோதும் சில சுருட்டு முதலாளிமார் 1000 சுருட்டுக்கு 50 ரூபா சம்பளம் வழங்கத் தயங்குவதேன். உரிய சம்பளத்தை வழங்கத் தவறும் பட்சத்தில் சுருட்டு முதலாளிகளுக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.

தாவடியில் நடைபெற்ற இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. மா. பொ. முதலியார் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. முதலியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது சங்கப் பிரதிநிதிகள் இலங்கைபூராவும் சென்று போராட்டம் நடாத்தி 50 ரூபா சம்பளத்தை வழங்கச் செய்துள்ளனர்.

குறைந்த சம்பளத்தை வழங்கும் தொழிற்சாலைகளைத் தொழிலாளர்கள் பகிஷ்கரிக்க முன்வந்தால் முதலாளிமார் உரிய சம்பளம் வழங்கத் தயங்கமாட்டார்கள்.

தைப்பொங்கல் தினத்திற்கு முன் கணக்குத்தீர்க்கும்போது 1000 சுருட்டுக்கு 50 ரூபா சம்பளத் வழங்கத் தவறும் முதலாளிகளுக்கு எதிராக தொழில் திணைக்கள அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். (கொ-இ)

## சட்டப்பிரச்னைபற்றி விவாதம்

(யாழ்ப்பாணம்)

கரம்பகம் அன்னபூரணம் கொலைவழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜாமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு சட்டப்பிரச்னைபற்றிய வாதம் நடைபெற்றது.

இம்மாதம் 14ம் தேதி காலை வரை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## புஷ்பராசாமீது வழக்கு

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி எஸ். புஸ்பராசா மீது பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கியதாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் யாழ். பொலிசில் கடமை புரியும் பொலிஸ் கான்டபிளான பொன்னம்பலம் பத்மநாதனை கையால் அடித்து சிறுகாயம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை யடுத்து எதிரிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பிக்க உத்தரவிட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி விசாரணையை ஒத்திவைத்தார்.

## ஆலய தர்மகர்த்தா கொலை: சந்தேகநபர் கோர்ட்டில் சரண்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு செல்வ விநாயகர் ஆலய தர்மகர்த்தா கொலை சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் பொலிசாரால் தேடப்பட்டுவந்த இராமநாதி பாலசுப்பிரமணியம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு ஸி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் அனுசரணையுடன் சரணடைந்தார்.

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த ஆலய தர்மகர்த்தாவான 'ஐப்பான்' என்றழைக்கப்படும் சதாசிவம் இராமலிங்கம் என்பவர் கடந்த 5-ம் திகதி நண்பகல் மனிதாபிமானமற்ற முறையில் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார். கல்வயல் பெருங்குளம் வீதியில் நடைபெற்ற இக்கொலை சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸ்நிலைய அதிபர் திரு. பீ. செனிவிரத்ன ஸ்தலத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மாவட்ட நீதிபதி திரு. ஸி. வி. விக்னேஸ்வரன் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனையை 6-ம் திகதி மாலை யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த ஓர் சட்ட வைத்திய அதிகாரி நடத்தினர்,

இறந்தவரின் உடலில் சுமார் 10 வெட்டுக்காயங்கள் வரையில் காணப்பட்டது. சந்தேகநபர்களைப் பொலிசார் தேடினர். இதைத்தொடர்ந்து இராமநாதி பாலசுப்பிரமணியம் என்ற நபர் நீதிபதிமுன்னிலையில் சரணடைந்தார். இவரை இம்மாதம் 14ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இறந்தவரான சதாசிவம் இராமலிங்கம் சுமார்10 மாதங்களுக்கு முன்பு அவருடைய மருமகனை இராமநாதி கிருஷ்ணபிள்ளை என்பவரைக்கொலை செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திரா காங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே சமயம் லோகசபையின் 15 தொகுதிகளைக் கைப்பற்றிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ். 41 தொகுதிகளைக் கைப்பற்றிய மக்கள் கட்சித் தலைவர் திரு. சரண்சிங்கின் இல்லத்திற்கு அவருடன்கூட்டு எதிர்க்கட்சி ஒன்றை அமைப்பது தொடர்பாக பேச்சு நடத்தினர். (இ)

பொங்கல் விசேட விற்பனை
இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுள்ள
பொங்கல் வாழ்த்து மடல்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
ஃ சாரதா ஸரோர்ஸ் அன் புத்தகசாலை
2, பஸ் நிலையம் (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம்,
ஃ மாக்மிலன் புத்தகசாலை
673, ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரேசன்சந்தி) யாழ்ப்பாணம்.

இலங்கை இளங்கலைஞர் மன்ற கட்டிட நிதிக்காக
பிரபல தென்னிந்திய பாடகர் சங்கீத கலாநிதி எம். பாலமுரளிகிருஷ்ண அளிக்கும் அரிய இன்னிசை விருந்து
12-1-80 சனி மாலை 6 மணி
யாழ். திறந்தவெளிஅரங்கு
பிரவேசக் கட்டணம்: ரூபா: 25.00, 50.00, 100.00
4550
ரிக்கற் கிடைக்குமிடங்கள்:
சின்னத்துரை அன்பிறதர்ஸ்
சுபாஸ்கபே யாழ்ப்பாணம்
வைற்கபின் நல்லூர்
கமலா ஸ்ரோர்ஸ் சின்னக்கடை
ராணி ஆபரண மாளிகை-கன்னாதிட்டி
பொண்ட் கல்விநிறுவனம் யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org